செ.வெ.எண் 46                                                        22.9-16

<u>பத்திரிக்கை செய்தி</u>

விருதுநகர் மாவட்ட வேலைவாய்ப்பு அலுவலகம் வாயிலாக தனியார் வேலைவாய்ப்பு முகாம் ஒவ்வொரு மாதமும் நடைபெறுகிறது. அதன்படி, செப்டம்பர் 2016-ஆம் மாதத்திற்கான தனியார் வேலைவாய்ப்பு முகாம் 28.09.2016 புதன்கிழமை அன்று விருதுநகர் மாவட்ட வேலைவாய்ப்பு அலுவலகத்தில் காலை 10.00 மணிக்கு நடைபெற உள்ளது. இதற்கு முன்னர் நடைபெற்ற தனியார் வேலைவாய்ப்பு முகாம்களில் மிகப் பெரிய நிறுவனங்கள் கலந்து கொண்டு ஆயிரத்திற்கும் அதிகமான நபர்களை தேர்வு செய்துள்ளனர். 28.09.2016 அன்று நடைபெற உள்ள தனியார் வேலைவாய்ப்பு முகாமில் ஐந்து முன்னணி நிறுவனங்கள் கலந்து கொண்டு 8-ஆம் வகுப்பு தேர்ச்சி முதல் டிகிரி வரையிலும், பார்மஸி பயின்றவர்கள் மற்றும் ஐடிஐ/டிப்ளமோ (எலெக்ட்ரிக்கல் மற்றும் மெக்கானிக்கல் பிரிவினர் மட்டும்) கல்வி பயின்றவர்களையும் தேர்வு செய்ய உள்ளனர். இந்த அரிய வாய்ப்பினைப் விருதுநகர் மாவட்ட பணிநாடுநர்கள் பயன்படுத்திக் கொள்ளுமாறு கேட்டுக் கொள்ளப்படுகின்றனர்.

தனியார் வேலைவாய்ப்பு முகாம் மூலம் பணி நியமனம் பெற்றவர்களது வேலைவாய்ப்பு அலுவலக பதிவு மூப்பு எவ்விதத்திலும் பாதிக்கப்படாது எனவும் விருதுநகர் மாவட்ட வேலைவாய்ப்பு அலுவலர் தெரிவிக்கிறார்.

21/9/16

மாவட்ட வேலைவாய்ப்பு அலுவலர்,
விருதுநகர்.

21/9/16    21-9-16